கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.392/2020 வா.சா.2 ராமகிருஷ்ணன்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 24.03.2026

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 6 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்பதையும் இவ்வழக்கு யார் மீது யார் தாக்கல் செய்துள்ளார் என்பதையும் 4 ம் வாதி தான் என்னிடம் கூறினார் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்ன சாட்சியம் அளிக்க வேண்டும் என்பதை அவர் தான் கூறினார் என்றால் சரியல்ல. நான் எனது சாட்சியத்தை தட்டச்சு செய்து கொடுத்து உள்ளேனா என்றால் கொடுத்து உள்ளேன். எனது சாட்சிய வாக்குமூலத்தை யார் சொல்லி தட்டச்சு செய்தார்கள் என்றால் ஈஸ்வரி சொல்லி தட்டச்சு செய்தார்கள்.

2) 4 ம் வாதி சத்தியமூர்த்தி சாட்சி சொல்ல சொன்னதன் பெயரில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றும் பின்னர் யார் யார்க்கு பாகம் பிரிந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ. 18 உயில் சாசனம் யாரால் யாருக்கு எப்போது எழுதப்பட்டது என விவரம் ஏதும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. உயிலில் யார் எழுதினார்கள் என்ன எழுதினார்கள் என தெரியாமல் 4 ம் வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் இட்டேன் என்றால் சரியல்ல. ஈஸ்வரி சொல்ல பாலவடிவேல் பேப்பரில் எழுதினார். பின்னர் அது தட்டச்சு செய்யப்பட்டு 2 மணி நேரத்திற்கு பிறகு என்னால் கையொப்பம் இடப்பட்டது.

3) மேற்படி உயிலில் ஈஸ்வரி கைரேகை வைத்தாரா கையொப்பம் இட்டாரா என எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவர் கைரேகை வைத்தார் . ஈஸ்வரி எத்தனை கைரேகை வைத்தார் என்றால் மூன்று தாள்களில் தலா ஒரு கைரேகை வைத்தார். மேற்படி உயில் எங்கு எப்போது எழுதப்பட்டது என்றால் 21-06-2021 அன்று பொள்ளாச்சி பல்லடம் சாலையில் உள்ள ஈஸ்வரி வாடகைக்கு இருந்த வீட்டில் வைத்து எழுதப்பட்டது. மேற்படி வீட்டின் கதவு எண்ணோ, வீதி பெயரோ எனக்கு தெரியாது என்றால் சரிதான். ( சாட்சியிடம் வா.சா.ஆ. 18 உயில் காண்பிக்கப்பட்டது ) வா.சா.ஆ. 18 உயிலில் மூன்றாம் பக்கத்தில் மட்டும் தான் கைரேகை முழுமையாக உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ. 18 உயிலின் முதல் இரு பக்கங்களில் கைரேகையே இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.18 உயிலின் அசல் எழுதப்பட்ட பிறகு யாரிடம் இருந்தது என்றால் ஈஸ்வரியே வைத்து இருந்தார்.

4) மேற்படி ஈஸ்வரி உயிருடன் இருந்த காலத்தில் இவ்வழக்கின் 2ம் வாதியாக சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அவர் வா.சா.ஆ.18 உயில் ஏற்படுத்தியதாக வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஈஸ்வரி உண்மையிலேயே வா.சா.ஆ. 18 உயிலை ஏற்படுத்தி இருந்தால் அதனை வழக்குரையில் குறிப்பிட்டு இருப்பார் என்றும் ஆனால் வா.சா.ஆ. 18 உயில் அவரது இறப்பிற்கு பின் போலியாக எங்களால் ஏற்படுத்தப்பட்டது என்பதால் தான் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

5) வழக்குரையில் ஈஸ்வரி கையொப்பம் இட்டு உள்ளார் என்றால் சரிதான். ஆனால் உயில் எழுதிய சமயத்தில் அவர் உடல்நிலை குன்றியதால் கைரேகை வைத்தார். ஈஸ்வரி உயில் எழுதியதாக சொல்லும் சமயத்தில் கையொப்பம் இட இயலாத அளவிற்கு என்ன நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் அவருக்கு கை நடுக்கமும் , கையில் வீக்கமும்

இருந்தது. ஈஸ்வரி வா.சா.ஆ. 18 உயில் தேதியில் என்ன நோயால் பாதிக்கப்பட்டார் என மருத்துவ சான்று உள்ளதா என்றால் இருக்கலாம்.

6) இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு 6 மாதத்திற்கு உள்ளாகவே வா.சா.ஆ.18 உயில் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லும் நிலையில் அந்த 6 மாதத்திற்குள் அவரால் கையொப்பம் இட இயலாத அளவிற்கு என்ன நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் உரிய விளக்கம் அளிக்கப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் வா.சாஆ. 18 உயிலின் அசல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தெரியவில்லை. ஈஸ்வரிக்கே வா.சா.ஆ. 18 உயில் சொத்து தொடர்பாக உயில் எழுத அருகதை இல்லை என்றால் சரியல்ல.

7) வா.சா.ஆ. 18 உயிலில் ஈஸ்வரியின் முகவரியாக கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அகிலாண்டபுரம் போஸ்ட், சிங்காநல்லூர் , 1/11 அங்காளம்மன் வீதி தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ( **சாட்சி பதில் சொல்லாமல் அமைதியாக இருந்தார்**). தட்டச்சு செய்ய 2 மணி நேரம் வெளியே சென்றதாக சொல்லும் நிலையில் அதனை எங்கே சென்று தட்டச்சு செய்தார்கள் என எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஈஸ்வரியின் கைரேகை உடைய வேறு பத்திரங்கள் வேறு பத்திரங்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ 18 உயிலில் உள்ள கைரேகை ஈஸ்வரி உடையது அல்ல என்றும் சாட்சிகள் ஆகிய எங்கள் மூவரில் ஒருவர் உடையது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 18 உயில் சாசனம் போலியானது என்பதால் அதன் அடிப்படையில் 4 ம் வாதி எந்த உரிமையும் கோர இயலாது என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |

**ஒப்பம்/-( மு.ச. ஸ்ரீநாத்)**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி

பொள்ளாச்சி